1979 மார்ச் 20]

காவிரி ஆற்றின் குறுக்கே பாலம்.

வினா எண் 468—திரு. எஸ். வி. இராமசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) காவிரி நதியின் குறுக்கே முசிரி இணைப்புப் பாலம் கட்டும் வேலை தொடங்கி மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் இன்னும் அதைக் கட்டி முடிக்காமல் இருப்பதற்கான காரணம் என்ன ?

(ஆ) அது எப்போது கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) 1972-ம் ஆண்டு மே மாதத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினாலும், வேலையின் அளவு கூடியதினாலும், கான்கிரீட் விட்டங்கள் கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் செய்ய வேண்டியுள்ளதால் அதிக கால வரை தேவைப்படுகிறது.

(ஆ) இப்பாலம் 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14-ம் நாளில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். வி. இராமசாமி : இந்தக் காவிரி பாலத்தினுடைய மதிப்பீடு எவ்வளவு என்று அறிய முடியுமா ? அப்பாலம் அரசுத் துறையினால் கட்டப்பட்டதா ? தனியாரால் கட்டப்பட்டதா ? தந்தை பெரியாருடைய நினைவாக இந்தப் பாலத்திற்கு தந்தை பெரியார் பாலம் என்றோ, பேரறிஞர் அண்ணா பாலம் என்றோ பெயர் வைக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, இப்பால வேலையின் மதிப்பீடு ரூ. 139 இலட்சம். தனியாரால்தான் இதனுடைய கான்ட்ராக்ட் வேலை செய்யப்படுகிறது. தந்தை பெரியாருடைய பெயரை இந்தப் பாலத்திற்கு வைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய நல்ல ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பெறும் டிராக்டர்களுக்கான வரி.

வினா எண் 469—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) விவசாயத்திற்குப் பயன்படுத்தும் தனியாரின் டிராக்டர்கள் கொண்டே கிணறு வெட்டும் கம்பர்ஷனை இயக்கி கிணறு வெட்டி வாடகை பெற்று வருவதை அரசு அறியுமா ?

(ஆ) இதற்கு அனுமதி உண்டா ?

(இ) ஆம் எனில் இதற்கு வரி விதிப்பும் வருமான தொகையும் யாது ?